
ஓலை 43 | ஓசை 149 | ஜூலை 2023

# அகர முதல இலக்கியப் பேரவை



## கவிதை வார இதழ்

தமிழ்ப்பணியில்: அகர முதல இலக்கியப் பேரவை (ம) சிவம் அறக்கட்டளை

# அறிவோம் வள்ளுவம்!



**சிற்றின்பம் வெ:.கி யறனல்ல செய்யாரே**
**மற்றின்பம் வேண்டு பவர்.**

அறநெறியால் பெறும் இன்பத்தை விரும்புகின்றவர், நிலையில்லாத சிறிய இன்பத்தை விரும்பி அறம் அல்லாதவற்றைச் செய்யார்.

**Translation:**

No deeds of ill, misled by base desire,
Do they, whose souls to other joys aspire.

**Explanation:**

Those who desire the higher pleasures (of heaven) will not act unjustly through desire of the trifling joy. (in this life.).


/Aagaramuthalaa

அகர முதல இலக்கிய பேரவையில்
இணைய-9597887847

# அகர முதல
## இலக்கியப் பேரவை

அகமும் தமிழே!
முதலும் தமிழே!!

## நிர்வாகக்குழு

செல்வமுத்துகுமரன் குணசேகரசிவம்
சிவம் அறக்கட்டளை,முகையூர்

## இதழாசிரியர்கள்

அ.வில்சன்
குமர.தர்மசீலன்

## வடிவமைப்பு

அ.வில்சன்


## அலுவலக முகவரி

97, குஞ்சிதபாதம் நகர், டவுன் ஸ்டேசன் தென்புறம்,
மயிலாடுதுறை - 609001

Aagaramuthalaa www.அகரமுதல.com aagaramuthala@gmail.com

# குணமது கைவிடேல்

**பா வகை: முச்சீரான சிந்தடியில் நாலடிச் சமநிலைச் சிந்து**



பொன்னும் பொருளும் பொருட்டல்ல - வாழ்வில்
புதையல் என்பதே குணம்தானே
மின்னும் பண்பே மிளிர்ந்திடுமே - தாழ்விலும்
மிடுக்காய் குணமே நிமிர்த்திடுமே
என்றும் இதனை விதைத்தாலே - பண்பில்
எழிலும் இதமாய் சேர்ந்திடுமே
நின்றே பேசும் நற்குணமே - இறப்பிலும்
நிலையாய் வீசும் சாமரமே

குணமொன்றே குலம்காக்கும் பற்றிடுக - கொடியே
குமுகாயம் நலம்காக்க கற்றிடுக
பணமதுவும் காகிதமே பண்பில்லா - வீட்டில்
படுந்துயரில் விற்காதே பண்பதையே
அணியாக அலங்கரிக்கும் அழகாய் - தானே
அகத்தூய்மை இல்லையெனில் வெறுங்கூடே
மணியெனவே ஒளிர்ந்திடுமே மாண்பாய் - குணமும்
மதிப்பினையும் கூட்டிடுமே மனங்களிலே



கவிஞர் பூர்ணிமா சங்கர்,கோயமுத்தூர்

# ஆறடி விந்தியம் காமராஜர்

எளிமைக்கு என்றும் இலக்கணமாம்
போலித் தனமில்லா புகழ் ஜோதியாம்.
கல்லாமை ஒழிந்தாலே இல்லாமை
போகுமென உணர்ந்திட்ட உத்தமராம்.



பதவிதனைத் தேடுவோர் மத்தியில்
நாடிவந்த பதவிதனை நாடாதவரே!
அதனால் கிங் மேக்கர் ஆனாரே!
கல்வி கற்கும் பிள்ளைகளின்
வயிற்றுப் பாட்டுக்கு வழிவகுத்து
மதிய உணவு தந்த வள்ளலே!



வான் தந்த மழைதனை சேமிக்க
வழிவகுத்த அணை வங்கியன்றோ!
சாலைகளைப் பொறுத்தே
நாட்டின் வளர்ச்சியென சாலைகளும்
பாலங்களும் அமைத்த நித்திலமன்றோ!
நாட்டின் நிலை உயர தன் மந்திரி
சபைதனிலே அறநிலை அமைச்சராய்
கக்கனையமர்த்தி அரசாண்ட விந்தியமன்றோ!

நாட்டு மக்கள் உயர எனக்கு
வேண்டாம் மணமென்று மறுத்ததால் பேசப்பட்டீரோ
அயல் நாட்டிலும் அன்று.
அவ்வறவழியைப் பார்முழுதும் போற்றுதய்யா!
நாடு முழுதும் நல்விழா உமக்கெடுத்து
கடவுளாய் பாதம் தொட்டே வணங்குதய்யா!

கவிஞர் பாரியன்பன் நாகராஜன்,குடியாத்தம்

# முல்லைப்பாட்டு

பனிக்கடல் பருகிய
பஞ்சு பொதி மேகம்
நனந்தலை உலகை
நனைத்தது பெரு மழையால்.

எழுநிலை மாடத்தில் வாழ் தலைவி
செருமுனை சென்றோன்
வருகைக்காய் விழி கலங்க
வருந்திய நெஞ்சைத் தேற்றினாள்.





காயமது பிரிவால் மெலிந்தே
காயமுறு மஞ்ஞையாய் நடுங்கி
பாவை விளக்கின் ஒளியதில்
பாவை தன் நெகிழும் வளையதைச்

சரிபடுத்தியே எழுநிலைமாடமதில்
சொட்டிடும் மழைநீர்ஓசை
செவிதனில் இன்னோசையாய் விழ
விழி மூடாது ஏங்கிப் படுக்க

பகைவரை வென்றே
வாகை மாலை சூடியே
எக்காளம் முழங்க
வெண்சங்கொலிக்க

வெண்மழை தூவும் நாளில்
அஞ்சனமன்ன காயாம்பூக்களும்
பொன்வண்ணக் கொன்றையும்
அங்கையாய் வெண்காந்தளும்

செங்குருதியாய்ச் செங்காந்தளும்
செந்நிலப் பெருவழியில் மலர்ந்திட
வள்ளியங்காட்டினைத் தாண்டியே
விளைந்த வரகுக்கதிர் புலத்தே

திரி மருப்பு இரலையோடு
திரிந்த மென்மடமான் கண்டே
பரிவோடு வந்திடும் தலைவனின்
பரி பூட்டிய தேரொலி கேட்டே மகிழ்ந்தாள்,
தலைவி.

கவிஞர் செ.கலைவாணி,மெல்பேர்ன்

# பெண்மை

கருவாய் இருந்து கதறி அழுது
வெளிச்சம் கண்டு விரல் பிடித்து கடித்து
தாயை உணர்ந்தாள் பெண் சிசுவாக
தாயிடம் நேசமும்
தந்தையிடம் பாசமும்
அளவு மாறாமல் அர்ப்பணித்தாள் பெண் குழந்தையாக
பள்ளி கல்வி தினம் சென்று
உற்றார் உறவினர் குணம் கண்டு
அறிவை வளர்த்த ஆசானின் பாதம் தொட்டு வணங்கி
மகிழ்வாள் மாணவியாக
பூப்படைந்து சுய ஒழுக்கம் சுயமாய் கற்று
சுதந்திரமாய் வளர்ந்தாள் பெண்ணாக
தாயாய் மாறி தாய்க்கு பணிந்து உதவினாள் குமரியாக
தந்தைக்கு கட்டுப்பட்டு பாசத்திற்கு உட்பட்டு
வாசற்படி இறங்குவாள் மணப்பெண்ணாக
குங்குமமிட்ட மாங்கல்யம் மார்பில் சுமந்து
மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறாள்
புதுப்பெண்ணாக
கருவாய் இருந்து கண்ணியமாய் பிறந்து
கன்னியாய் வளர்ந்து கருவை சுமப்பாள் கர்ப்பிணியாக
குழந்தை பெற்ற குழந்தை என்ற எண்ணம் ஏற்படுகிறது
ஆண்டுகள் கழித்து
பெண் ஒரு மகத்தான பிறப்பு
அவளை பற்றி வர்ணிக்க முடியாத அளவு சிறப்பு
மகப்பேறு பெற்று மறுபிறவி வலி சுமந்து
மீண்டும் மகப்பேறுக்கு தயாராகும் பெண்ணை விட
இவ்வுலகில் தைரியசாலி வேறு யாரும் இல்லை





கவிஞர் இர மணிகண்டன்,வங்கனூர்

# காதலிக்கக் கற்றுக்கொள்

பிறர் உன்மீது வைத்த அன்பை அறியவே
புரிதலுடனே காதலிக்கக் கற்றுக்கொள்!

மரம் செடியின் நன்மைகளை அறிந்திடவே
இயற்கையைக் காதலிக்கக் கற்றுக்கொள்!

எழுத்துக்களின் மீது உள்ள ஆர்வத்தைப் புரிந்திடவே
எழுத்தையும் எழுத்தாணியையும் காதலிக்கக் கற்றுக்கொள்!

பாடல் இசைகளில் உள்ள லயம் அறியவே
சுரத்தைக் காதலிக்கக் கற்றுக்கொள்!

விளையாட்டின் மீது உள்ள ஆர்வத்தை வெளிப்படுத்திடவே
தன்னம்பிக்கையைக் காதலிக்கக் கற்றுக்கொள்!





பிறருக்கு உதவிடும் எண்ணத்தை தெரியப்படுத்திட
ஈகையைக் காதலிக்கக் கற்றுக்கொள்!

பிற கலைகளின் மீதான ஈடுபாட்டை உணர்ந்திடவே
ஆர்வத்தைக் காதலிக்கக் கற்றுக்கொள்!

கோபம் குரோதம் இவைகளை நீக்கவே
பாசத்தைக் காதலிக்கக் கற்றுக்கொள்!

தோல்வி அவமானம் இவைகளை விரட்டவே
முயற்சியையும் நம்பிக்கையையும் காதலிக்கக் கற்றுக்கொள்!

மனிதா நீ!
நல்ல மனிதராய் பிறருடன் ஒன்றி வாழ்ந்து
பிறருக்குத் தீங்கிழைக்காது
அனைவரின் அன்பைப் பெற்றிடவே
உன்னை நீயே காதலிக்கக் கற்றுக்கொள்!

கவிஞர் இரா.கோமதி,பொள்ளாச்சி

# எதற்காக?

வாழ்வில்
நிலையாமைக்கான
சான்றுகள்
அதிகம்

உலகில்
நிலைபேறுக்குரிய
வாய்ப்புகள்
மிகவும் அதிகம்



வாழ்வின் கணங்களில்
உனக்கான படிப்பினைகள்
ஏராளம்



உலகின் மாயைகளும்
அதனாலான
ஏமாற்றங்களும்
இன்னும் ஏராளம்

கண்களுக்கு மட்டுமே
காட்சிகள் பிழையாகலாம்

வாழ்தலில்
அதற்கான கெடுபிடிகள்,
போட்டிகள்
எத்தனையெத்தனை?

தேவைகளையும்
உபரிகளையும்
அதீதங்களையும்
பிரித்து
உணர்ந்து கொள்

உண்மையான வாழ்வைத்
தேடு
உண்மையான நிலைபேறடைய
நிறைய உழை

இல்லையெனில்
மனிதனாகப்
பிறவியெடுத்தது
எதற்காக?

கவிஞர் மரு ஜலீலா முஸம்மில்,ஏறாவூர்(இலங்கை)

# கவிதையில் பேசலாம்

கலையுணர்வில் வடிக்கும் கவிஞர்கள் வல்லோர்!
கவிதையிலே பேசுகின்ற திறனைக் கொண்டோர்!
குவலயத்தில் மூத்ததாம் முத்தமிழை மொழிவோர்
கவிதையெனும் இயலினால் களிப்பினைக் குவிப்போர்!
மனங்கொண்ட எண்ணங்களை மாலையாய் ஆக்குவார்!
மதியினிலே நிலைத்திடும் கருத்தைப் பொதித்திடுவார்;
இலக்கணம் என்பதுவோ நறு(தமிழ்)மணத்தை பரப்பிடும்!
கலக்கமான நெஞ்சிற்கும் சாமரசத்தை வீசிடும்!
அன்றிலிருந்து இன்று வரையிலே இ(னித்தி)ருக்கும்
அருங்கவிதைகள் ஆன்றோரால் உயிராய் சிறக்கும்!
செந்தமிழே சிகரமாக என்றென்றும் நிலைக்கும்!
கத்துகின்ற கடலாக விரிந்தழகாய் நிறையும்!





கவிஞர் மாலதி இராமலிங்கம், புதுச்சேரி

# கூந்தலழகு



காற்றிலாடும் உன்
கூந்தலின் அழகில்
புதுக் கவிதை
தோன்றுகிறது.

உன் கேசத்தை தழுவும்
காற்றை
எந்தன் விரல்களால்
சிறை பிடித்து

உன்கூந்தலோடு
காற்று
பேசிய இரகசியத்தை
கேட்க நினைக்கிறேன்.

என் காதலி
சொன்ன இரகசியத்தை
உன்னிடம் பகிரவா?
என வெட்கித்து

வேறு திசை
நோக்கி
திரும்பி விட்டது
காற்று.

காற்றிலே
உன் கூந்தல்
உதிர்க்கும்
நீரினில்

என் மனதை
ஆசுவாசப்படுத்திக்
கொள்கிறேன்
தேவதையே!

கவிஞர் மு.அமானுல்லாஹ் பாகவி,செங்குன்றம்

# இதயம் துடிக்கும்

இதயம் நுழைந்து
இதழில் விரிந்தே
இரவின் இருளிலும்
இனிய கனவுகளாய்

கைரேகை திசையறியா
கையேடு தேடுமே
பார்வையின் கணைகள்
பாய்ந்தே கனமாக்கும்





கண்ணோடு கண்கலந்தே
கவிழும் நெஞ்சில்
அதிகாலை உதயத்தின்
அகாலச் செம்மை

வாசம் சேர்க்கும்
வானிலை விளங்கும்
விடியலின் கதிர்கள்
விரிந்தே தவிக்கும்

நேரிசை வாழ்த்துப்பா
நேசக்கரம் விரிக்கும்
காரணம் தேடியே
காணாதே துடிக்கும்

கவிஞர் இரஜகை நிலவன்,மும்பை

# ஒரு யாசகனின் ஒருநாள் கனவு

கண் விழித்ததுமே
அன்றைய தேவைகளை
சிந்திக்கும் மனித
மனங்களுக்கு மத்தியிலே.

வாழ்க்கையின் நோக்கங்களை
விதைக்கத் தெரியாமல்.
சறுக்கி விழுந்த யாசகன் நான்.



உதயமொன்று நிகழுமென்று
கீழ் வானை நோக்கினேன்.
இலக்கு தெரியாமல் சறுக்கி விட்டேன்.



தெருத் தெருவா
அலைந்து திரிந்து.
பிறர் வீசும்
எச்சில் உண்டு.

தினம் சில்லறைக்கு
கை ஏந்தி .
கிழிந்து போன
கந்தல் ஆடையும்.

ஒட்டி உலர்ந்த
ஒல்லி மேனியுமாய்.
விடியலே இல்லாத
வாழ்க்கை வாழும்.

என் கனவெல்லாம்
பசித்த வயிறுக்கு
ஒரு கவளம் சோறு
மட்டுமே.

நான் பசியில்
கொட்டாவி விடுகையில்
ஊன நரம்புகள் முகாரி இசைக்கின்றன.

கவிஞர் ரிஹான நலீம்

# இலக்கினை நோக்கி

கனவுடன் நீண்டதோர் பயணம் செல்லவே
கல்லாக்கிட வேண்டும் மனதை முதலிலே
கடிப்பட்ட மனதையும் சகித்திடவேணுமே
கட்டிட்டு திரும்ப ஓடிட வேண்டுமே

சொல்லடி விழும் ஏற்றிட வேண்டுமே
சொட்டும் இரத்தத்தை தாங்கிட வேண்டுமே
சொல்லொணா வலியை கடந்திட வேண்டுமே
சொத்தென்று நம்பிக்கையை நம்பிட வேண்டுமே

இளைப்பாற நேரம் இல்லாமல் ஓடவேண்டுமே
இமயத்தை தொட்டிட முன்னேற வேண்டுமே
இமைக்காது வேலை செய்திட வேண்டுமே
இமைக்கும் பொழுதெல்லாம் செதுக்கிட வேண்டுமே

வியர்வை கடலாக மாறிட வேண்டுமே
விடாப்பிடியாக நின்று போராட வேண்டுமே
விதியோடு சண்டையிட்டு எதிர்த்திட வேண்டுமே
விரக்தியோடு துணிந்து செயலாற்ற வேண்டுமே



விழவிழ எழுந்திட வேண்டுமே
விழுவதால் அனுபவம் பெற்றிட வேண்டுமே
விண்ணைத் தாண்ட முயற்சியை தொடர வேண்டுமே
விமர்சனங்களை ஒதுக்கி வைத்திட வேண்டுமே




கசக்கும் சோதனைகளை ஏற்றிட வேண்டுமே
கசப்பதையும் மருந்தாக்கி வலிமையாகிட வேண்டுமே
கடந்து பாய்ந்து எட்டிட வேண்டும்
கட்சிதமாய் அடைந்திடுவாய் இலக்கை நீயுமே

கவிஞர் ஜஸாரா ஜலீல்

# சொல்லப்பட வேண்டிய காவியம்

ஒவ்வொரு மனிதன் வாழ்வின்
அடையாளம் ஓர் தனி சிந்தனை
சொல்ல முடியாத பின்னணிகளின் பிழை
வழக்கு போட முடியாத வரிகள்
வாழ்க்கை என்னும் தூறலில்
சிக்கித் தவிக்கிறது இந்த
காதல்.

அறியாத வயதில் அலை மோதி
அறிந்த வயதில் விலை மோதி
தெரிந்த வயதில் சிக்கித் தவிக்கிறது இந்த வலிகள்
காணாத இதயத்தில்
கருமேகங்களாக
ஒவ்வொருவர் நெஞ்சங்களிலும்
எழுதப்படாத காவியமாக.



காயப்பட்டு காலத்தில்
காத்துக் கொண்டிருக்கிறது
கண்ணீருடன்.

விடையறிய வினா கொண்டு
எண்ணிலடங்கா எழுத்துக்களுடன்
எழுதப்படாத காவியமாக.



காலம் காலமாக
ஒவ்வொருவர் வாழ்விலும்
ஒரு சகாப்தம்.

கவிஞர் ம.செல்லமுத்து

# கல்விக்கொள்(ளை)கை



பூந்தளிர் பருவத்தில்
பொதி சுமக்கும் நிலை!
பாடநூல்கள் புன்னகையை
பறித்து விட்டது!
மதிப்பெண் என்னும் மாயை
மாற்றத்தின் வழியென
மனதில் விதைக்கப்பட்டது!
தேர்வு தோல்வியால் கல்வி
பயணத்தை நிறுத்தினர் சிலர்
மாணவ பருவ மகிழ்ச்சிக்கு
நெருக்கடி வழங்கும் புதிய
கல்வி கொள்(ளை)கை!



கவிஞர் செ.தமிழ்நேயன்

# வா தோழா!



விழி எதிரே
திவலையின் முதல் துளி.
மண்ணோடு பட்டு கரைந்தே போக.

அடுத்த அடுத்த ஆசாரத்தில்
நின்றேன்.
இரசித்தேன்.
நனைந்தேன்.

மயிலென ஆடியே
பெட்டகத்தை சேமிக்கிறேன்
நினைவுகளின் பொக்கிஷமாய்.

நிதர்சன அவனி
தேவையில்லை ஆதவனே.
வா செல்லலாம்.
கற்பனை ஆழிதனில்.

யாரின் பார்வைக்கும் அஞ்ச வேண்டாம்
எந்நாவும் அகம் பிழிந்து
உதிர வாசத்தில் அகம் மலரும்
சுயநலவாதிகள் இல்லா அவனி அது.

தன் சுயம்.
தன் மரியாதை
தன்னம்பிக்கை
தன் உலகமாய்.
தன் மகிழ்வில் அகம் குளிரலாம்.

நோகடித்து ஆனந்தமுற
எவரும் வேண்டாம்.
குழந்தை தனத்தை மட்டும் கொண்டு
வாழ்வை கழிக்கலாம்.
வா தோழா!



கவிஞர் ச.கார்த்திகா,பழநி

# வானவில்



என் வானவில்லே!
என் வாழ்க்கையில்,
உன் பாசம் வந்ததால்,
என் ஊடலில் வானவில்லாக ஊடுருவி,
ஊஞ்சலாடுகிறது
உன் பாசம்.



கவிஞர் பெ.சுரேகா,திண்டுக்கல்

# நெகிழி

நாளுக்கு நாள் வளரும்
நவீன நாகரீகம்
அத்தியவசியமென்று
இருப்பதை யெல்லாம்
விழுங்கி ஏப்பமிடும்
மாற்றுப்பொருள்கள் கவர்ச்சிகரமாய்
உலகச் சந்தையில்.



உண்ணும் இலைகளிலிருந்து
தாகம் போக்கும்
நீரினை பரிமாறும்
குடுவைகள் வரை
அனைத்துமே
நெகிழிகள் வசம்.

இத்தனை வருடங்களாய்
நெகிழியை
எதிர்த்துப் போராடிய
சட்டங்களெல்லாம்
அடக்கு முறையில் அடிபட்ட
சாமானியனைப் போல்
எங்கள் கிராம வயல்களின்
வரப்போரங்களில் நெகிழிகளாகவே
சரிந்து விழுந்து கிடக்கிறது.



மழைத்துளிகள் துளியுமின்றி
வறண்ட பாலைவன
பனைமர நிழல்களில்
கசியும் மதுக்கோப்பைகள்
கவிழ்ந்ததும்
கையிலும் பையிலும் இருந்ததையெல்லாம்
வேண்டாப் பொருளென தூக்கியெறிந்து
விட்டுச் செல்வதே வாடிக்கையாகிறது
வாணிபக் கழக வாடிக்கையாளர்களுக்கு.

கேட்பாரற்று கிடக்கும்
நெகிழிகள் உணவா
உயிர்க் கொல்லியாவென்று
அறியாது திண்ணும் ஐந்தறிவு
ஜீவன்களின் வயிற்றில்
செரிமான மண்டலமும் செயலிழந்து
மதுப்பிரியர்களுக்கு முன்னதாகவே
மண்ணில் விழுந்து
மரணிக்கிறது.

கவிஞர் கோவை ஆனந்தன்,கிணத்துக்கடவு

# மனித நேயம்

மானுடா மனிதா நேயத்தோடு வாழ்ந்திடு
பிறருக்கு உதவி செய்து வாழ்ந்திடு
கேட்டு வருபவருக்கு கொடுத்து உதவிடு
கொடுப்பதால் குறைவு ஒன்றும் ஏற்படாது
தானம் செய்வதால் குறை ஏற்படாது
கொடுத்தவன் வாழ்வு ஒரு நாளும் குறையாது
எத்தனை உயிர்கள் பசியால் வாடுகிறது
அவர்களுக்கு உன்னால் முடிந்தவற்றை கொடுத்திடு
ஒரு கை செய்வது மறு கைக்கு தெரியாமல் வாழ்ந்திடு
வையகத்தில் பிறந்தால் மனித நேயம் ஒன்றே
நம்மை கட்டி காக்க வைத்திடு
மானுடா நம் இனமே பிறருக்கு
எடுத்துக் காட்டாய் விளங்கிட வேண்டுமே
உயிர் மண்ணை விட்டு பிரிந்தாலும்
மனித நேயம் என்றும் நிலைக்கட்டுமே



கவிஞர் ம.செ.அ.பாமிலா பேகம்,நாகர்கோவில்

# மோன நிலை



சிற்றின்பங்களுக்குள்
வசப்படாத காமம்
குரோதம் அனைத்தும்
கடந்து வந்த
மனத்தை உரைத்திடும்
பார்வை அது;

அடங்காமல் அணுதினமும்
ஆர்ப்பரித்து வரும்
ஆழ் மனமும்
திடீரென
ஒரு கட்டத்தில்
ஆரவாரமற்றதோர்
சிறார் பூங்காவினைப்
போல வெறிச்சோடிக்
கிடக்கும்;



அது தனிமையை
நாடிச் சென்று
தனக்கென ஓர்
நிரந்தர அங்கீகாரத்தைத்
தேடிக்
கைக் கொள்ளும் வரையில்
ஓயாது;

அத்தகு பேச்சற்ற
சிக்கலற்ற ஆழ் மனப்
போராட்டங்களுக்கான
முதல் முன்னுரையே
அனைத்தும் கடந்து
வந்த மோன நிலை
என்பரோ?

கவிஞர் மலர் அபி

# தீ நாவு தின்னுடுச்சே

குடந்தைச் சாமியெல்லாம் குருடாப் போச்சுதுங்க
நடந்த கொடுமை சொல்ல நா கூடக் கூசுதுங்க
எத்தனை அழகு பார்த்து பிள்ளைங்க போனதுக
பித்து பிடிக்க வச்ச தீ  பேயாட்டம் போட்டுடுச்சே
தவமிருந்து பெத்த மக்க தலையெழுத்து மாறிடுச்சே
சவமுன்னு பொதைக்கயில சாமி கூட செத்துடுச்சே
கண்ணு நெறஞ்சு நிக்க கையாட்டி போனதுக
கடைசி மூச்சு கூட கத்தாம நின்னுடுச்சே
தொட்டியில தூங்கயில தொடச்சுப் போடுவாங்க
தொட்டி கட்டித் தூக்கி வந்து புதைச்சுப் போட்டாச்சு
புத்தகத்தை பாத்துப் பாத்து பொத்தி வச்ச மக்கா
பொகஞ்சு போகையில கத்தி கத்தி செத்தாயா
ஆசக்கனவுகள நெருப்பு அள்ளிப் பொசுக்கிடுச்சே
இளம்பிஞ்சு தேகத்த தீ நாவு தின்னுடுச்சே
எரிஞ்சு போன உசுரு எந்த இனமுன்னு தெரியல
எரிச்சுப்  போட்ட பின்னே சுடுகாடும் அழுதுடுச்சே
தப்பு எங்க நடந்ததுன்னு சரஸ்வதிக்குத் தெரியாதா
ஒப்பு சொல்லி ஊர் கூட்ட ஒரு பிஞ்சும் உசுரோடில்ல
கோயில்ன்னு பேரு சொல்ல கும்பகோணம் பாரு
கோன்னு சொல்லி அழ சனத்துக்கில்ல உசுரு.



16.7.2004
கும்பகோணம் பள்ளி தீ விபத்து நினைவாக.

கவிஞர் இளையவன் சிவா,மடத்துக்குளம்

# தெரிந்து தெளிதல்

அதிகாரம் : 51

அறம்பொருள் இன்பத்தொடு
தற்காப்பென்ற நான்கும்.
ஆய்ந்தறிந்தபின் ஒருவன்
தொழிலுக்குத் தெரியப்படுவான்.

நற்குடிபிறந்து பழிபாவக்குற்றத்தின்
பற்றிற்கு அஞ்சிநடந்து.
எவர்குடியும் கெடுத்திடநாணும்
உற்றோனை நம்பிடல்நலம்.

உற்றபனுவல்பல கற்றுத்தேர்ந்த
குற்றமற்றாரை ஆயுங்கால்.
கற்றறியாமை அவரிடத்து
ஒட்டாதிருத்தல் அருமையாகும்.

ஒருவனை கொள்ளுங்கால்
குணமறிந்து குற்றமாய்ந்து.
அருமையானபல தெளிவுகொண்டு
அதன்பிற்பாடு சேரல்நலம்.




தற்சேரும் பெருமைக்கும்
பிறன்சேரும் சிறுமைக்கும்.
உரைகல்லாய் அறியப்படுவது
அவரவர்களின் செயல்களே.

சுற்றத்தோடு தொடர்பற்று
உற்றாரின் பழிக்கஞ்சாரை.
நலனென நம்பித்தெளிதல்
பிழையெனக் கொண்டுமுடியும்.

அறியாமை குணமுடையோரை
அன்புடைமையால் நம்பித்தெளிதல்.
நம்பித்தெளிந்தோர்க்கு அஃது
அறியாமையை கொண்டுதரும்.

யாதொன்றும் ஆராயாது
ஒருவனைத் தெளிந்தாலஃது.
தெளிந்தவனின் வழிமுறைகட்கும்
தீராத்துன்பம் அள்ளித்தரும்.

தீர்க்காராயாது தெளிதலாகாது
தெளிந்தறிந்தபின் அவரிடம்.
தெளிவாய்க்கொள்ள தகுமான
பொருளேற்றல் நலம்.

ஆய்ந்தறியாது தெளிதலும்
தெளிந்தவனிடம் ஐயங்கொளலும்.
ஆகிய இவ்விரண்டும்
அழிவிலா துன்பந்தரும்.

கவிஞர் ஆன்றனி ஜமுனா,நாகர்கோவில்

# என்னவனே!

என்னவனே!
இனி இவ்வாறு உன்னை
அழைக்க முடியுமா எனத் தெரியவில்லை.

மூன்றாம் நபரின் வருகையால்
நமது உறவில் விரிசல் வந்தது

உன் வாழ்க்கைத்துணை யாரென்று
உறுதியாகும் முன்னரே
என்னைவிட்டு விலகி நிற்கிறாய்.
உறுதியானால் ஒருவேளை
என்னை உதறி விடுவாயோ?

ஏனடா ?!
என்னால் உன் வாழ்க்கைக்கு இடையூறு
வரும் என்று எண்ணிவிட்டாயோ?!



உறுதியாகக் கூறுகிறேன்.
என்னால் உனக்கும் உன் வாழ்விற்கும்
என்றும் இடையூறு வராது.

என்றும் உன் நினைவுகளோடு நான்.

கவிஞர் ஜோதி,பெரிய குமாரபாளையம்

# ஆகம சுள்ளி

கொண்டதைக்
கொண்டாடித் தீர்க்காது
இங்ஙனம் மறுப்பின்
அங்ஙனம் தொலைந்துபோம்
எங்ஙனம்  தேடிக் களைப்பாய்

தூக்கியெறியும் பொழுது
துளி சினம் துளிர்விடும்

பொழுதுகள் தேயும்
போதிமரத்து நிழலில்

பிழை பொறுத்து
பிழை பொறுத்து
ஆகம சுள்ளிபோம்
தகனமாகுது
உற்றார் நன்மைக்கு!





கவிஞர் ஜெயப்பிரபா,சென்னை 81

# தேடல்

ஏனோ சில
பொழுதுகள் சிந்தனை
சிதறி வழிகிறது

அதுவா இதுவா
எதுவென்று உணருவதற்குள்
ஓராயிரம் சொற்கள்
சூழ்கையிலே

தள்ளிவைத்த
விடயங்கள் எள்ளி நகையாடும்
நிலைக்குள்

ஏதோ ஒரு தடை
நீக்க வழியற்று
இயலாமை பாயில்
உறங்காத விழிகள்

கனவோடே
சில பொழுதுகள்
கற்கண்டின் ருசியில்

தேடல் தினமும்
குவிகையில்
ஆழ்மனம் கூப்பாடு
அமைதிக்குள் மடிகிறது



கவிஞர் கனகசுந்தரி பாஸ்கரன்,திருப்பூண்டி

# கேட்டது கண்டது கருதுவது!

சிறுமையெது பெருமையெது என்றிங்கு வாழ்வோர்
சிந்திக்க வேண்டுமதனை விடுத்து ஒருவர்
சிறுநீரை மற்றவர்மீது கழித்தலில் தவறென்னவென்று
சிறிதும் பண்பின்றி கேட்கின்றார் சிறுநீர்
கழித்த பண்பற்ற மனிதன் சார்ந்தசமூக
கழகத்தின் தலைவரொருவரது உயர்சாதி திமிராவல்லது
கண்ணியமென்பது என்னவென்றறியா மடமையா, எதனைச்சொல்ல?

என்தங்கை மகனின் புண்ணியார்ச்சனை நாளில்
எங்கள் இல்லம்வந்த அர்ச்சகர் கேட்ட
பசுமாட்டின் சிறுநீருக்காய் நாயாய் நானலைந்து
பக்கத்து கிராமத்தில் இருந்து பெற்றுவந்த
எக்கச்சக்க எரிச்சலில் இருந்தேன் நானங்கு!

எல்லோருக்கும் அர்ச்சகர் தந்தார் பசுசிறுநீர்
கலந்த கலவையைத் தீர்த்தமென்ற திருப்பெயரில்!
கடுப்புடன் அருந்தி அவதிப்பட்டு நின்றவேளை
சிறுவனை ஆசிர்வதிக்க முகமருகே எடுத்தணைத்து
சிரித்துநின்ற அவ்வேளை என்னாருயிர் மறுமகன்
நீரூற்று ஊற்றெடுப்பதைப்போல ஊற்றினான் அந்தணர்மேலதை
நீறுபூசிய நெற்றியினர் வாங்கிக்கொண்டார் மனமகிழ்ந்து;
உரைத்தாரவர் இறைவனவர் செய்த்திட்ட பூசையை
உன்னதப்பூசையென அவன்மூலம் உரைத்து விட்டானென!
அறிந்தேனன்று அதுவே உயர்க்குடிப் பண்பின்
அருமையான வெளிப்பாடென்று; ஆனந்தம் கொண்டேன்!

வளர்ந்தமனிதனொரு வனின்னொருவளர்ந்த மனிதன்மீது உயர்வுதாழ்வு
வன்மம் பாராட்டி சிறுநீர்கழித்ததாய் வந்ததொருசெய்தி,
அதனைத்தொடர்ந்து மாநிலமுதல்வர் பாதபூசை செய்தசெய்தி,
பாதபூசை பெற்றமனிதர் தானல்லவந்த சிறுநீர்
பட்டமனிதர் என்றுரைக்க தவறிழைத்தவன் சமூகத்து
பெரியமனிதர் வெட்கமின்றி உரைக்கிறாரது தவறில்லையென;
பண்பாடறிய பாவிகளே வள்ளுவம் படியுங்களேன்!




குறள் 991:
எண்பதத்தால் எய்தல் எளிதென்ம யார்மாட்டும்
பண்புடைமை என்னும் வழக்கு.

கவிஞர் தீந்தமிழ் திருமலைக்குமரன் அருணாச்சலம்,கோவில்பட்டி

# தாயே



ஒரு துளியில் கருவா உருவாகி
பத்து மாதத்தில் வயிற்று சுமந்து
பத்து மாதத்தின்
உயிருக்குள் அடைகாத்து
உதிரத்தை பாலாக்கி
பாசத்தில் தாலாட்டி
பல இரவுகள்
தூக்கத்தை தொலைத்து
பத்து மாதத்தின் குழந்தையாக
பெற்றெடுக்கும் ஒரே தெய்வம் அம்மா மட்டும்தான்.
தமிழ் மொழியில் முதல் எழுத்து
அம்மா மட்டுமே.
பள்ளியில் ( அ ) என்ற
தமிழ் எழுத்து முதலில் கற்றுக் கொண்டோம்.
பல உறவுகள் இருந்தாலும்
அம்மா போல் உறவு
யாரும் இருக்க முடியாது.
அம்மா இல்லை என்றால் உலகத்தில் குடும்பம் இல்லை.
முதல் கடவுள் அம்மா மட்டுமே தான்.
ஒரு குடும்பத்தின்
அம்மா இருந்தா தான்.
அந்த குடும்பம் எப்போதும் வெளிச்சமாக இருக்கும்.
அப்பா அம்மா இல்லையென்றால்
வாழ்க்கை இல்லை.

கவிஞர் க.மணிமாறன்,செம்பியன் கோமல்

# என் வரிகள் சமர்ப்பணம்!

உன்னால் முடியாது என உறங்காதே
உன்னால் முடியும் என விழித்துப் பார்
உன் இலக்கு கண்களுக்கு தெரியும்
உன் இலக்கிற்கு  பின்னே
உன் வெற்றிக்கொடி பறப்பது புரியும்
உத்வேகத்தோடு புறப்பட்டு நீ
உன் வெற்றியால் உலகில் இடம் பிடிப்பாய்
சாதனையாளர்கள் வரிசையில் உன் பெயர் பதிப்பாய்
மக்கள் மத்தியில் முடிசூட்டப்படுவாய்
அதன் பின்னேதான் நீ
நிம்மதியான உறக்கத்தை தேடிச்செல்வாய்
சாதிக்க துடிக்கும் ஒவ்வொரு உறவுக்கும்
நான் எழுதிய இவ்வரிகள் சமர்ப்பணமாகட்டும்



கவிஞர் அகிலா ஜவுபர்,ஏத்தாளை புத்தளம் இலங்கை

# இறைவன் இறைவன்

இறைவன் இல்லாத இடம் உலகில் எங்குமில்லை
இருக்கும் இடத்தில் இன்பமும் மகிழ்ச்சியுமே எல்லை
விண்ணிலும் மண்ணிலும் இருக்கிறார்
மழலை மொழியிலும் மனிதன் மரண நிலையிலும் இருக்கிறார்!
தொடக்கமும் முடிவும் இறைவனே
அனைத்தையும் படைத்து ஆட்சி செய்யும் தலைவர் இவரே

கடவுள் அதிகம் காணப்படும் இடமும் உண்டு
நித்தமும் கண்ணீர் வடிக்கும் மனிதனின் கண்ணீரை
கருணையோடு துடைக்கும் உள்ளத்தில் வாழ்கிறார்
எண்ணும் எழுத்தும் கற்பிக்கும் ஆசானின் வடிவில் இருக்கிறார்
பிறருக்கு கை கொடுத்து உதவும் கரங்களில் தவழ்கிறார்
உண்மை உழைப்பு அன்பு நீதி நேர்மையுள்ள இடத்தில் குடியிருக்கிறார்

அநாதைகள் ஆதரவற்றோர் கைம்பெண்களுக்கு
உதவிடும் போது இறைவன் மகிழ்கிறார்
இசையில் கவியில் தர்மத்தில் இறைவன் வாழ்கிறார்
மனிதனின் மனம் மிருகமாக மாறும் போது இறைவன் விலகிப் போகிறார்
பாவங்கள் அநீதிகள் பெருகும் போது இறைவன் மறைந்து போகிறார்



கவிஞர் அ இராபர்ட் கென்னடி,கானூர்

# என்னை நானறியேன்

அதோ
அந்த செவ்வான ஓடையில்
மஞ்சள் வண்ணம் இடைப்பூசி
இதோ வருகிறேன்
உனை வருடிச் செல்கின்றேன் என்று.

எனை ஒவ்வொரு நாளும்
மாலை ஏமாற்றி
காலை நகைப்புடன் எழுகிறான்.
போன சென்ம சூரியன்.
இந்த சென்ம காரிகை.

மாலை நேரம் கசங்கிபோனது
இக்காட்சியைப்பிடித்து அமர்த்தி வைத்த
அலைபேசி நொடிகள்.

காற்றாலும்,மழையாலும் அழியாதாம்.
நம்பிக்கை எனும் உயிர்கொடுத்து இட்ட முட்டைகள்.

முழுநீலங்கருவையில் காய்ந்த சருகின் விளிம்பில்.
காக்கை அமராது.
ஓணான் உரசாது.
ஒய்யாரமாக இட்டுவிட்டது முட்டைகளை.
இந்த பட்டாம்பூச்சி.

கவிஞர் சே கார்கவி கார்த்திக்

# மயூர விழியழகன்

நிமலனின் சரீரமும்
நிர்மலனின் ஒரு
பக்க மூளையும்
கொண்ட
கவினவன்

இலக்கியத்தில்
தீராக் காதல்
கொண்ட
கவிஞனவன்

கதையின் மூலம்
எனை கவர்ந்த
கள்வனவன்

கற்பனையில்
உருவம் வரைந்து
நான் நேசிக்கும்
கதாபாத்திரமவன்

மரகத பச்சையுடன்
மயில் வண்ணம்
கலந்த மயூர
விழியழகன்



கேடிக்கெல்லம்
கேடியின்
விழிகளில் தொலைந்த
காரிகை இவள்.

நிர்மலன் சர்வேஷ் குமார்

# கிராமத்து மணம்


பாசமும் பசுமையும் பாசாங்காய் இல்லையே
வேசமும் துவேசமும் வேரிலும் இல்லையே

உள்ளத்து அன்பும் உவகையாய் இயற்கையும்
ஊற்றெடுக்கும் கேணியாய் உருவான தன்மையாம்

ஐயறிவு ஜீவனும் குடும்பத்தில் ஒருறவாம்
ஐக்கியமாய் ஆன கிராமத்து வரமாம்

சிக்கல்கள் இல்லாத எளிமையே மணமாம்
சிரிப்பிலே கலப்பற்ற எழிலான மனமாம்

ஒற்றுமை ஒன்றிணைவு உயிர்ப்பிக்கும் இடமாம்
ஒன்றாகக் கலந்திடும் உறவுகள் களமாம்



கவிஞர் பஸ்லா பர்ஸான்,காத்தான் குடி(இலங்கை)


# முத்தம்

ஒரு கடியில் முத்தத்தில் இரத்தம்
உறுஞ்சிவிழும் உயிரைவிடும் கொசுவே!

ஒட்டி ஏறியே முத்தமிட்டு
கசங்கி உயிரை விடும் எறும்பே!

ஒரு கொட்டு முத்தத்தில் உடலையே
உலுக்கிடும் தேளே!

ஒவ்வொரு துளி தேனுக்கும்
பூவை முத்தமிடும் தேனியே!



ஓர் அழகாய் உரசிசென்று
முத்தமிடும் வட்டமிடும்
வண்ணத்துப்பூச்சியே!

ஒரு பழத்தையும்  ஓர் அலகால்
கொத்தி முத்தமிடும் பச்சைக்கிளியே!

ஒன்றாக  உணவுக்காக  ஓரிடத்தில்
சேர்ந்து முத்தமிடும் பலவித  பறவைகளே!

கவிஞர் நீலா சுபாஷ்,ஆக்கூர்

# காதல் கிறுக்கன்

## காதலித்துப் பார்



மேகங்கள் காகிதமாகும்
காற்று கவிதையாகும்
பூக்கள் பஞ்சு மெத்தையாகும்
நீல வானத்தை பிழிந்து மையாக்கி
கவி வடிக்க தோன்றும்

தென்றலோடு பேசிடுவாய்
நிலவை வர்ணிக்க தொடங்குவாய்
நண்பகல் தான் உனக்கு சூரிய உதயம்
பார்ப்பது அனைத்தும் அழகாய் தென்படும்
தனிமையில் சிரித்திடுவாய்

கனவு உலகில் மிதந்திடுவாய்
கற்பனையிலே வாழ ஆரம்பித்து விடுவாய்
செல்லாத இடமெல்லாம் சென்று வருவாய்
உன் காதலியுடன் கைகோர்த்து

கல்லூரி செல்லாமலே பட்டம் பெற்றிடுவாய்
கிறுக்கன் என்ற பட்டம்
உன்னை சுற்றி ஒளி வட்டம் தோன்றும்
உன் காதலி மட்டும் உன் நினைவில் இருப்பாள்

வானம் அழகாகும் நட்சத்திரம் துணையாகும்
இரவு நண்பனாகும் பகல் எதிரியாகும்
அடிக்கடி நாட்களை எண்ணுவாய்
காதலி முகம் காண ஏங்குவாய்

அவள் பெயர் உனக்கு மந்திரமாகும்
அவள் முகம் உனக்கு தேவதையாகும்
மொத்தத்தில் அவளை காண
நாள் தோறும் நீ காதல் கிறுக்கன் ஆகிவிடுவாய்.

கவிஞர் ர.ரமேஷ்,திருப்பூர்

# அன்பின் நிஜம் அம்மா

பாத்து ஓரமா
போயிட்டு வீட்டுக்கு
வந்துடு சாமியென்று
வழியில் என்னை எங்கேனும்
பார்க்கும் நேரங்களிளெல்லாம்
அன்பின் சொற்களை
என் மீது வாரி இறைக்கும்
அம்மாவின் முகத்தை
நேற்றைய நாள்
நான் கடைசியாக பார்த்தேன்
நான்கு பேர் என் அம்மாவை
தன் தோலில் ஏற்றி
தூக்கி சுமந்து செல்ல
என்னிடம் எதுவும்
சொல்லாமலேதான்
போயிக்கொண்டிருந்தது
போயிட்டு நாளைக்கு
வந்துடுறேன் சாமி
நீ பாத்து பத்திரமா
இருந்துக்க யென்ற
கடைசி
வார்த்தையை உச்சரிக்காமலே



கவிஞர் ச.சக்தி,பண்ருட்டி

# விதைப்போம்

நடந்து கொண்டுதான்
இருக்கிறேன்
என் நிழலின்
வியர்வை
கால் நனைக்கிறது

ஒரு
பொதுநல
விதையின்
தூரத்து மரம்



எனக்கு முன்
என் நிழல்
ஓடுகிறது

மர நிழலில்
என் நிழலை
காணவில்லை

மரம்
பழம் தருகிறது
சுவடே தெரியாமல்

விதைக்குள் இருக்கும்
காடறிகிறது
மனம்

கைகள்
முதன்முறையாக
விதைக்கிறது

ஏதோ ஒரு
நிழலுக்கு
குடை பிடிக்க

விதைக்கத் தெரிந்த
கைகளுக்கு மட்டும்
அத்தனை மரங்களும்
போதி மரங்களே

கவிஞர் அன்னலெட்சுமி சரவணன்,ஈரோடு

# குறிகளின் சங்கமம்

அவள் சிரிப்பாள் தொடரிசைக்குறி
அன்பின் அறிகுறி.
அவள் சிணுங்குவாள்
ஆச்சரியக்குறி.

அவள் கோபிப்பாள் முற்றுப்புள்ளி.
அவள் அணைப்பாள் காற்புள்ளி.

மொத்தத்தில் அவள் நிறுத்தற்குறிகளின் பள்ளி.



கவிஞர் மதீரா(அறிவிப்பாளினி),இலங்கை

# பூக்கள் சொல்வதென்ன?

பாலைவனத்து பூக்கள் தான்
ரோஜா
அதை விரும்பாதவர் யார் ?

விஷச் செடியில் பூத்ததுதான்
அரளிப் பூக்கள்
அதை வைத்து
பூஜை செய்யாதவர் யார் ?



சேற்றில்தான் பூக்கிறது
செந்தாமரை
அதன்
அழகை ரசிக்காதவர் யார் ?

மாற்றான் தோட்டத்து
மல்லிகையும்
மணக்கதான் செய்கிறது
அதற்கு மயங்காதவர் யார் ?

திறமைகளும், குணங்களும்
எங்கிருந்தாலும்
தகுதியாக
ஒருநாள்
ஏற்றுக்கொள்ளப் படும்

இடமோ, சூழ்நிலையோ
அதை பறிப்பதில்லை

கவிஞர் இரா.மதிராஜ்,காங்கேயம்

# விநோதம்

காற்றாலை அமைக்கிறார்களாம்
கரண்ட் தயாரிக்க
மரங்கள் அசைந்தால்தானே
காற்றாலைகள் இயங்கும்.

ஆயிரம் குருவிகள் வீடு இழக்கின்றன
ஒற்றை மனிதன்
ஒன்பது மாடி கட்டிக் கொள்வதற்காக.

மனசாட்சியே இல்லையாம்
மதுபான கடைக்காரனுக்கு
பாட்டிலுக்கு மேல் பத்து ரூபாய் வேணுமாம்.

காடுகழனி எல்லாம் அழிஞ்சு கட்டிடமாகுதே
பசிச்சா இனி பணத்தையே தின்பாங்களோ?
வெள்ளாமை விளைஞ்ச பூமி இன்னைக்கு
வெள்ளை மாளிகையாச்சு.

விழி திரையை மூடினாலும்
இதய சிம்மாசனத்தில் பதிந்திட்ட
உன் உருவம் விழிகளுக்குள் வட்டமடிக்கிறதே.
பறக்க விரும்பாமல்
என் இதயக்கூண்டில்
அடைந்து கிடக்கவா ஆசைப்படுகிறாய்.



கவிஞர் பி.ரோஜாராணி,தேனி

# இல்லை

பேசிடாத நாட்கள் இல்லை
கேட்டிடாத வார்த்தைகள் இல்லை
உரைத்திடா எண்ணங்கள் இல்லை
பகிர்ந்திடா பழங்கதைகள் இல்லை
இடையில் இரகசியங்கள் ஏதும் இல்லை
திட்டுவாங்கிடாத தினங்களும் இல்லை
கண்ணீரில் கரைந்திடாத காலமும் இல்லை
விட்டுக்கொடுக்காத நாட்களும் இல்லை
விட்டுக்கொடுக்காமல் வாதாடிய
வாரமும் இருந்ததில்லை
தவறென தெரிந்து தண்டனை
தராத தினங்களும் இல்லை
தவறில்லையெனில் தள்ளி நின்று
தவிக்க விட்ட நிலையும் இருந்ததில்லை

அழுகை என்பது தினம்
தொடர்ந்த போதிலும்
காதலென கைகோர்த்த நாள்முதல்
கொடுத்த சந்தோஷத்திற்கும்
குறைவேதுமில்லை.





கவிஞர் சரண்யா தேவி,மேட்டூர் அணை-1

# என் இனிய உயிரே

துணையென வந்து வாழ்வில் இன்பமுற செய்தாய்
கைவிரல் பற்றியே காலம் பல கழித்து வாழவந்தோம்
நோயினில் நீ வீழ்ந்தாய்
தாயும் தந்தையையும் இழந்த வழியை
மீண்டும் தந்து சென்றாய்.
கொழுந்துவிட்டு எறிகின்ற நெருப்பில்
ஊதுகின்ற துருத்தி முனையிலே தோன்றுகின்ற
அனலைப் போல
பெருமூச்சு விட்டழுகிறேன்.
அத்துன்பம் தம் உள்ளத்தே அடங்காது மேலெழும்
செறிந்த ஈமத்தீயாகிய நெருப்பினிற் புகுந்தே
உன்னோடே கொடுத்துவிட்டேன் என் இனிய உயிரை!



கவிஞர் ச.இராஜ்குமார்

# நிசப்தமான நினைவுகள்

அன்பெனும் குடியிலே
அயர்ந்து உறங்கிய நாட்கள்

தாயின் பாசம்
அளவில்லாத அற்புதம்

தந்தையின் பாசம் தகர்க்க
முடியாத சித்திரம்

சகோதர பாசம்
சந்தேகமில்லா சகாப்தம்

சகோதரி பாசம்
சொல்லமுடியா விசித்திரம்

மழலை உறவு வளர்ந்தபின்
மறந்து போகும்
காதல் உறவு தோற்ற பின்
கசந்து போகும்

நட்புறவு  நாடி துடிப்பு என்பர்
அதுவும் நடிப்பாக துடிக்குது
உயிரென.




நட்பு என்பது
நழுவல் அல்ல தழுவல்

இவை யாவும்
சில வலிகளின் உச்சம்
மனவரிகளின் மிச்சம்.

கவிஞர் வ.சு.கலைவாணி,நெய்வேலி

# காதல் நிலவு

காதல் என்ற ஒன்று அழகானது
கவிஞனின் இதயத்தில் கவிதையானது
கற்பனையும் நிஜமானது
நிலவும் அவளானது
அந்த நிலவிடம் காதல் உண்டானது
நித்தமும் கனவானது
கனவுக்குள் கனவு உண்டானது
உருவம் உயிரானது
சிந்தனை அவளானது
முகவரி அறியாதது
தொலைதூர காதல் அழகானது
தினமும் உன்னை ரசிக்கும் விழியானது
இருவருக்குள் இதயம் இடம் மாறுது
இணைந்து வாழ ஆசை உண்டானது
இமைப்போல் உன்னை காப்பேன் இது உறுதியானது
வருவாயா இறங்கி என் வாசல் ஆவது
உனக்காக காத்திருக்கும் இதயமானது
இரவுக்கு நீ வசந்தமானது
என் வார்த்தைக்கு நீ வரியானது
வர்ணிக்கும் நெஞ்சம் அழகானது
வான மகளே நீ நிலவானது
நிலவின் ஒளி விளக்கு ஆனது
விடியும் வரை நீ என் துணையானது
விண்ணைத்தாண்டும் என் காதலானது
உனக்காக தவிக்கும் இதயமானது
வாழ்க்கை புதிதானது
என் காதல் உனக்கானது
வருவாயா நிலவே காதல் இதமானது





கவிஞர் சௌ.தாரா,சேலம்

# மழையே!

விண்ணில் முத்தே
மண்ணில் வித்தே
மக்களின் சொத்தே
கொட்டும் மழையே
உன் வர்ண ஜலத்தை ரசிக்க
இரு விழிகள் போதாதே
கண்ணாடி பூக்களாய்
மண் மீது உடைகிறாய்
கண்மூடி திறக்கும் முன்னே
காணாமல் மறைகின்றாய்
மழையே மழையே
உன் வருகையால் மண் மணக்குது
நெல் மணி முளைக்குது
எங்கள் மனம் மகிழுது
மீண்டும் வரும் வரை கண்ணீர்
தராமல் கண்ணை தந்து செல்
மழைத்துளி மண்ணில் விழும்
உன் உன்னில் விழுந்தோ
உன்னை காணிக்கையில்
என்னில் மின்னல்.





கவிஞர் ஹரிஸ்,செம்பியன் கோமல்

# வர்ணஜாலம்

கீழ் வானத்தில்
அரைவட்ட வடிவமாய்
மழை நேரத்தில் சில
கணமே வந்துவிட்டுப்
போனாலும் வானவில்
அழகுதான் உன்னைப் போல!
என் மன வானில் எப்போதும்
ஒளிருதே உன் முகம்!
வர்ணஜாலம் காட்டுதே!

கவிஞர் லதா சுப்ரமணியன்,சென்னை.119

அகர முதல இலக்கிய பேரவை
அகமும் தமிழே!
முதலும் தமிழே!!

# ஆடி மாதம்

சூரியனுடைய நகர்வின் அடிப்படையில்
இயற்கையாக அமைவது
உத்தராயண, தட்சிணாயன புண்ணிய காலங்கள்.
இதில் ஆடி மாதம் முதல்
தென் திசை நோக்கிய பயணப்படுவதால்
தட்சிணாயன காலம் என்பர்.
ஆடி பிறந்தாலே எல்லாம் பண்டிகைகளும்
ஒவ்வொன்றாக வந்து நம்மை மகிழச்செய்யுமே!
ஆடி மாதப் பழமொழிகள்
"ஆடிப்பட்டம் தேடி விதை
ஆடி காற்றில் அம்மியும் பறக்கும்"
புதுப் புனலும் ஆற்றில் நுரை ததும்ப வருமே!
அக்காட்சியை, பல இடங்களில் இருந்தும்
மக்கள் காண வருவார்களே!
பகல் பொழுதும் கூடிய இருக்குமே!
"பதினெட்டாம் போர்க்களம்" என்று
மகாபாரதத்திலும் சொல்லப்படுகிறதே!
எல்லா கோயில்களிலும் விசேஷமான
பூஜைகளும், பரிகாரங்களும் செய்யப்படுமே!
புதுமண தம்பதியரை ஆடிக்கு அழைத்தும்
வந்து ,சீர், செனத்தையும் அள்ளித் தருவார்களே!
அம்மனுக்குக் கூழ் ஊற்றி மாவிளக்குப் போட்டும்
அம்மனை மகிழச் செய்வார்களே!
ஆடியில் கூடினால் சித்திரையில் குழந்தை
பிறக்கும் என்று தனியாக தம்பதியரை
பிரித்தும் வைப்பதுண்டு.
ஆடி காற்றில் பலவித நோய்களும்
வந்து போகுமே! அம்மையும் வருமே!
வேப்பிலைப் போல் கிருமி நாசினி
எதுவுமே இல்லை.
மஞ்சளும், வேப்பிலையும் நம் நாட்டின்
இயற்கை செல்வங்கள்.
இவற்றை நாம் நீரில் இட்டு
தினமும் குளித்தால் எந்த சரும
நோயும் அணுகாதே!
பாரம்பரியத்தை பின்பற்றினால்
நான் ஆரோக்கிய வாழ்வு வாழலாமே!




கவிஞர் கிருஷ்ணவேணி. ஆ,ஊத்தங்கரை

# காதல் ஊற்று



அணைத்த விரல்கள்
ஆவல் கொள்ளுதடி
அன்பே என்னருகே
வாயேன்டி

முத்தத்தை கூட
வருடுவது போல
தருவதில்
மென்மையிலும்
மென்மையடி நீ

உனை வாட்டும்
காற்றை கண்டித்தேன்

அவள் தேகம் நீ அறியாய்

மரியாதையுடன் தென்றலாக
மாறிவிடு என்றேன்

ஆம்!! என்றது காற்று

என் ஆன்மாவில்
ஊற்றெடுத்தது
காதல் ஊற்று

கொஞ்சி தீர்த்திடவும்
கோல மயிலே
உனை நெஞ்சில்
ஏந்திடவும் ஆசையடி

முத்தமிடவும் ஆசை
உன் முனகல் மொழி
கேட்டிடவும் ஆசை

பைங்கிளியே
உன் நெற்றி தொட்ட
என் உதடுகள்
நிம்மதி கொள்ளுதடி

நொடியும்
பிரிவதில்லை
கனவுகளும்
பெரும் தொல்லை !



கவிஞர் ஆர்.மோகன் ராஜ்,சென்னை

# கிராமிய காதல்

ஆடிமாசம் பிறக்குமுன்னே
பரிசம்போட வாங்கமச்சா
ஆவணியில் கைப்பிடிச்சா
ஏக்கமெல்லாம் தீருமச்சா

ஐப்பசியில் அடைமழையா
வந்துவந்து தூறும்மச்சா
உன் மூச்சுகாத்து பட்டாலே
தேகமெல்லாம் கூசுமச்சா

மக்காச்சோளம் போல
முத்துமுத்து பல்லழகி
நீ நடந்துவந்தா நாரசிப்ப
எடுப்பான இடையழகி

விழியோரம் நீபோட்ட
கருப்பான மையழகு
விடிஞ்சாலே கெடப்ப
தூசுபோல நான்ஒதுங்கி

கட்டழகு மேனியில
கட்டெறும்பா ஊரவா
மொத்தழகு உதட்டுமேல
முத்தகொஞ்ச தாரவா

தேக்குமர தேகத்துல
தேக்கிவச்சா போதுமா
ஆசையெல்லாம் திறந்துவிடு
பூட்டிவெச்சா நியாயமா



தோகைபோல முடிவிரிச்சி
பெண்மயிலா ஆடிவா
வாழையில விருந்துவெச்சா
ஏக்கமெல்லாம் தீருமே

வெடக்கோழி கொழம்புவெச்ச
வெளுத்துக்கட்ட வாரயா
இடுப்புவேட்டி தளர்த்திக்கொண்டு
இன்னுங்கொஞ்ச கேளுயா

மறுசோறு பந்தியில
வாங்காமத்தா போவனா
போதுமுன்னா முந்தியத்தா
நீட்டாமத்தா போவியா

வெத்தலையும் பாக்கிருக்கு
சுண்ணாம்பத்தா தடவிக்கோ
அதபோடும் முன்னே மறக்காம
காம்பகொஞ்ச கிள்ளிக்கோ

கரும்புக்காடு காஞ்சிருச்சு
தண்ணியத்தா பாச்சனு
தைமாசம் நெருங்கபோது
கண்ணுங்கருத்தா பாக்கணு

வாழைமர தோட்டத்துல
வாழைப்பழம் தொங்குது
அத ஆடுமாடு அங்கவந்து
மேயகொஞ்ச பாக்குது

கவிஞர் வெற்றிவேல்,திருப்பூர்

# என் சொத்து

படிக்கிறேன் என்று கவலை கொள்ளவில்லை
படித்துக் கொண்டே இருப்பேன் என்று கர்வம் கொள்கிறேன்.
எனது மௌனத்தை எல்லாம்
வாசிப்பின் உச்சமாய் வைக்கின்றேன்
எனது உச்சபட்ச கோபத்தை எல்லாம்
எழுத்துக்களாய் கொட்டித் தீர்க்கின்றேன்.

எனது எழுத்துக்கள் முதலில்
உன்னை வாசிக்க வைக்கின்றது என்றால்
எனது முதலடியை தொடங்கிவிட்டேன்
என்றே நினைக்கின்றேன்.
அடுத்த முறை நீ வாசிக்கும் போது
உந்தன் உதடுகள் தடம் புரளுகின்றது என்றால்
எந்தன் வரிகள் உனக்கு அச்சத்தை அள்ளித் தருகின்றது
பெற்றுக் கொள்.



விவசாயம் செய்திட்ட நிலத்தை
அளந்தே பார்க்காமல் அபகரித்தாய்.
வீணாய் போனது உன்னோடு
சண்டையும் போட்டுக் கொண்டு
பின்பு சமாதனமும் ஆக்கி கொண்டு
போதும் நிலத்தை நீயே
வைத்துக் கட்டிக் கொண்டு அழு
எங்களை விடு.



ஆனால் ஒன்றை மட்டும் விட மாட்டேன்
நினைவில் கொள்.

நாங்கள் படித்தால் உனக்கு ஏன் வலிக்கிறது
அப்படி உனக்கு வலிக்கிறது என்றால் வலிக்கட்டும்
என் அப்பனை ஏமாற்றி பிழைத்தால்
பிழைத்துக் கொண்டு போ
எங்களை ஏமாற்ற நினைத்தால்
உன் அப்பனாலும் முடியாது
அதை மட்டும்
நினைவில் வைத்துக் கொண்டு போ.

கவிஞர் கு.ரமேஷ்குமார் & ரமேஷ்யோகி,மதுரை

# நானும் நல்ல நடிகைதான்

நானும் நல்ல நடிகை தான்
தியாகங்கள் கடந்து
தினமொரு வேடம் தாங்குவதில்
நானோர் நல்ல நடிகைதான்

தூக்கம் மறந்து பசித்தும் புசியாமல்
முகம் மலர்ந்து பணிகள் புரிவதில்
தன்னிலை மறந்து நான்
தாங்கும் வேடங்கள் பிரமாதம்.

பொய்யான இவ்வுலகில்
உண்மை வாழ உறவுகள் தொடர
சில பொய்களும் சொல்வதில்
நானோர் சிறந்த பொய்காரி தான்.



சுமைகள் தாங்கும் தாயானேன்.
உறவைக்காக்க உண்மை மறைத்தேன்
வஞ்சகம் கபடம் கனவிலும் இல்லை
மாய உலகின் மந்திரமும் அறியேன்



தூற்றுவோர் தூற்றட்டும்
தூய அன்பு மட்டும் வாழட்டும்
நிந்திப்போர் நிந்திக்கட்டும்
நிரந்தர உலகில் உண்மை அறியட்டும்.

கவிஞர் ஷென்பகச் சோலையாள் ஆய்ஷ்,இலங்கை

# திருஞான சம்பந்தர் சுவாமிகள் புராணம்

## (பாகம் ஐந்து)

வைசிய வணிகர் சிவநேச செட்டியார் பெரும் தனவந்தர்
மைலாப்பூரில் வாசம் , வந்தாருக்கு வாரிக் கொடுப்பார்
சைவம் தழைக்க வந்த சம்பந்தரின் மீது பக்தி கொண்டார்
வையகம் புகழ பூம்பாவை என்ற மகளைப் பெற்றெடுத்தார்

மின்னல் கொடிபோல் வளர்ந்த மகள் பொன்னூஞ்சல் ஆடினாள்
பொன்னம்பலத்தானிடம் தினம் பக்தியுடன் நீறுபூசி வளர்ந்தாள்
தன்னலமற்ற தந்தை மகளுக்கு பக்தியில் சிறந்த வரன் தேடினார்
அன்னவன் திருஞான சம்பந்தருக்கு மணம் முடிக்க விழைந்தார்

நந்தவனத்தில் பூ பறித்த பாவையை அரவம் தீண்ட பலியானாள்
நொந்து நூலான செட்டியார் பார்க்காத வைத்தியம் இல்லை
வந்தவர் எல்லாம் கொடுத்த மருந்தும் மந்திரமும் பலன் இல்லை
எந்தப் பாவமும் அறியாத வணிகரால் இதை ஏற்க முடியவில்லை

சிதையில் மிஞ்சிய எலும்பு சாம்பலை குடத்தில் இட்டு பூஜித்தார்
விதை முளைத்து செடி வருவதுபோல் மகள் ஒருநாள் வருவாள்
அதை எதிர்பார்த்து ஞான சம்பந்தரின்பாதம் பற்றிக் கதறினார்
இறைவனை நினைந்து பதிகம் பாட பூம்பாவை எழுந்து வந்தாள்

"மட்டிட்ட புன்னையங் கானல் மடமயிலைக் (பத்து பாடல்கள் )
கட்டிட்டங் கொண்டான் கபாலீச் சரம் அமர்ந்தான்
ஒட்டிட்ட பண்பின் உருத்திர பல்கணத்தார்க்
கட்டிட்டல் காணாதே போதியோ பூம்பாவாய்"



திருஞானசம்பந்தர்

சிவந்த கைகள் வளையல் குலுங்க குடத்தின் வெளியே வளைந்தன
பவழப் பூம்பாவை மல்ர்மீது திருமகள் போல் வெளியே வந்தாள்
சிவநேசசெட்டியார் சம்பந்தர் திருவடிகள் தொட்டு வணங்கினார்
தேவமகள் ஆனந்தக் கண்ணீருடன் அனைவரையும் வணங்கினாள்

"நும் மகளை அழைத்துக்கொண்டு உமது வீடு செல்லும்" என்றார்
"எம் பிரார்த்தனை இதுவே நீவீர் அருள்கூர்ந்து நிறைவேற்றுங்கள்
இம் மகவை தாங்களே திருமணம் செய்துகொள்ள ஏற்புடையது ?"
"நம்புங்கள் இவள் திருமகளின் அவதாரம் தாரமாக ஏற்கமுடியாது"

தில்லையில் கூத்தனை பதிகங்கள் பாடி சீர்காழி சென்றார்
எல்லையில்லா மகிழ்ச்சியில் பெற்றோர் மணம் முடிக்க விரும்பினர்
நெல்லையப்பரின் அருள் பெற்ற நம்பியாண்டார் நம்பியின் மகள்
நல்ல மகள் ச்ம்பந்த்தருக்கு மணம் முடிக்க சம்மதமா கேட்டனர்

நம்பியாண்டார் நம்பி சம்மதிக்க திருமண வேலை தொடங்கியது
அம்மி மிதித்து அருந்ததி பார்த்து பாணிக்கிரணம் செய்தார்கள்
சம்பந்தரின் திருமணச் சடங்குகள் கோலாகலமாக நடந்தேறின
இம்மாதிரியான மணவிழா உலகில் வேறு எங்கும் நடந்ததில்லை

"வருகின்ற வந்திருக்கும் எல்லோரும் என் ஜோதியில் கலக்கலாம்,''
திருமணம் காண வந்தோர் அனைவரும் ஜோதியில் பிரவேசித்தனர்
திருநீலநக்க நாயனார் முருக நாயனார் போன்ற நாயன்மார்களும்
பிறவி நோய் நீங்க ஜோதியில் கலக்கவிண்ணில் "நமசிவாய" ஒலித்தது

(முற்றும்)

கவிஞர் ந.திருக்காமு

# நண்பனே!

என் தன்னம்பிக்கையைக் கூட்டும் தன்மானம்போல்
நீ என்னுள் உயிர்கொண்டாய் என்நண்பனே!
நீ கதைகதைக்கும் தருணத்தில்தான்
என் கண்ணீரின் மறுபக்கம் மகிழ்ச்சி என்று
நான் உணர்ந்தேன் நண்பனே!
இருள்சூழ்ந்த என் இறுகியமனதில்
நண்பனே வானவில் தோன்றுகிறது.
நான் உன்தோளில் சாயும்நேரம் !
மருந்தும் குப்பைமேனி தழையும்
குரல்வலியை மட்டுமே சரிசெய்யும்!
என் உடைந்து நொறுங்கிய மனதிற்கு
உன் வலிமை நிறைந்த வார்த்தையே
எனக்கு மருந்தாகும் நண்பனே!
சிறு குழந்தையின் கோபம் உன்னிடம்.
அதை கண்டு ரசிக்கிறேன்
என் உயிர் நண்பனே!
என் மகிழ்ச்சியை மேலும் கூட்டுவாய்
அதை குறைக்க நினைப்பதில்
நண்பா நீஉன்னிடமே தோற்றுபோவாய்!
ஆணும் பெண்ணும் பேசினால்
காதல் என்று சொல்லும்
பகுத்தறிவற்ற சமூகத்தை எண்ணி கலங்காதே!
நட்பின் ஆழத்தை அறிய
அறியாமையின் சமூகத்தால் ஒருபோதும் முடியாது!
நண்பனே நீஒருவன் மட்டுமே
என்றுமே நிரந்தரமானவன் நம்நட்புக்கு!





கவிஞர் க.பூமணி,சென்னை

# வானில் நீந்தும் நிலவில் நாளை!

நிலா நிலா ஓடிவா! நில்லாமல் ஓடிவாவென
குழந்தைப் பருவத்தில் விழைந்து அழைத்தோம்
நிலவினையே! அம்புலிகாட்டி அமுதூட்டினாள் அன்னையுமே!
ஓடிவிளையாடுகையில் உடனோடும் நிலவதுவும்!
வடைசுடும் பாட்டியென கதைகளைக் கேட்டிருப்போம்!
வளர்வதும் தேய்வதுமாய் வானில் தவழ்ந்திடுமே!
நிலவைப்பற்றி குழந்தையாய் அறிந்தவைகள் இவையன்றோ?
அறிவியல் பாடத்தால் நிலவு மறைப்பென்று
கிரகணத்தை அறிந்தோமே! சூரியனுக்கும் நிலவுக்கும்
இடையில் புவிவந்தால் நிகழ்வது நிலவுமறைப்பு!
நீரும் காற்றும் நிலவில் இல்லையென
ஆரம்பப் பாடத்தில் அறிந்தோம் நாமெல்லாம்!
ஆராயத் துடித்தோம் அறிவியலின் துணையாலே!
இரண்டாயிரத்து மூன்றில் அறிவித்தார் அன்றைய
பிரதமர் வாஜ்பாய் அவர்கள் சுதந்திரப் பொன்விழாவில்!
இரண்டாயிரத்து எட்டு அக்டோபர் இருபத்திரண்டில்
விரைந்தது சந்திராயன் ஒன்று சந்திரனைநோக்கி!
நிலவில் தண்ணீர், கனிமங்கள் மெக்னீசியம்
அலுமினியம்,சிலிகான் இருப்பதைக் கண்டறிந்தது!
இரண்டாயிரத்துப் பத்தொன்பது சூலை இருபத்திரண்டில்
சந்திராயன் இரண்டு வேகமாகத் தரைஇறங்கி
தொடர்பை இழந்தாலும் ஆர்கன்நாற்பது வாயுவின்
மூலக்கூறு இருப்பதை உறுதி செய்தது!
இந்த ஆண்டு ஜூலை ஈரேழில்
சந்திராயன்- மூன்று! நிலவின் தென்துருவத்தை ஆராய
முந்தியது இந்தியா!உலாவிகலன் உந்துகலன்
முன்பைவிட உறுதியுடன்! உணரிகள், வழிகாட்டிகள்
தொலைநோக்கி வசதிகள்,வேகக்கட்டுப்பாட்டுக் கருவிகளுடன்!
விண்வெளிக் குடியேற்றம் கலாமவர்களின் விழைவாகும்!
சந்திராயன் மூன்று இந்தியாவின் பெரும்வெற்றி!



கவிஞர் ஈ.சீ.சேஷாத்ரி

# திருஞானசம்பந்தர்!

அப்பரவர் பல்லக்கில் நேர்சுமர்ந்தார் வரலாற்றைச்
சேக்கிழார்தான், ஆயிரத்து இருநூற்றின் மேல்பாடல்
நேர்வடித்தார்! சுந்தரரோ "திருத்தொண்டத் தொகை "தனிலே
எம்பிரானார் சம்பந்தர் அடியார்க்கும் அடியேனென
குறித்திட்டார்! அறிவுசேகர் சம்பந்தர் தன்னையே!
தேவார மூவரிலே மூன்றான வயதிலேயே,
தோடுடைய செவியனன பாபகர்ந்தே பொற்றாளம்
பெற்றிட்டார்! வயதேழில் ஏற்றிட்டார் முந்நூலை!
மறையோர்கள் ஐயந்தீர்த்தே மூலமந்திரம் ஐந்தெழுத்தே
என்றுரைத்தார்! முயலகன்பேர் நோய்தன்னைத் தீர்த்திட்டார்!
பாம்புதீண்டி உயிர்நீத்த வணிகர்தன்னை சடையாயெனு
மாலென்றும் சரண்நீயெனு மாலென்றும் பதிகத்தைப்
பாடியவர் எழுப்பிட்டார்! சீர்காழி சிவபாத
இருதயர்க்கும் பகவதிக்கும் மகவாகத் தோன்றிட்டார்!
சைவநெறி தழைத்தோங்க பண்ணார்ந்த தோத்திரப்பா
தோணியப்பர் உமாதேவி அமுதப்பால் பொழிந்ததுவே!
நீலகண்ட யாழ்ப்பாணர் நட்பேற்றார்! மாதற்மடப்
பிடியோடு மடஅனமும் அன்னதோர் தொடங்கிட்ட
பதிகமது பாடினாரே! மங்கையர்க் கரசிவேண்ட
மதுரைநகர் சென்றவர்தான் சமணரொடு புனலலனாம்
வாததனில் நின்றிட்டார் கூன்பாண்டியன் வெப்புநோய்
தீர்ந்திடவே மந்திரமா வதுநீரு வானவர்மே
லதுநீரு என்றமைந்த "திருநீற்றுப் பதிக" மாம்
"மாதொருபா கன்பதிகம்" முதலாறு பாடலீற்றில்
திருவால வாயன்திரு நீறென்றும் அடுத்தைந்தில்
முடிவதனில் "ஆலவாயன் திருநீறே" என்றமைய
வைத்துரைத்தார்! நாயன்மார் அறுபத்து மூவரிலே
முக்கியமாம் மூவந்தனில் ஒருவரிவர் சம்பந்தரை
"சொற்கோ" வென மூவர்தனில் பதினாறு ஆண்டுவாழ்வு
ஆளுடைய பின்னையாம் பாலராவாய் வாழியநீ!



கவிஞர் கணக்காயன் (இ.சே. இராமன்)

# மறைமலை அடிகள்

கட்டுரை

## பிறப்பு

தனித்தமிழ் இயக்கத்தந்தை மறைமலை அடிகள், தஞ்சை மாவட்டம் நாகப்பட்டினத்தின் அருகில் உள்ள சிற்றூர் 'காடம்பாடி'யில் 15.07.1876-ஆம் ஆண்டு பிறந்தார். இயற்பெயர் வேதாசலம். 'வேதம்' என்றால் 'மறை' என்று பொருள். 'அசலம்' என்றால் 'மலை'. அதனால் பின்னாளில் வேதாசலம் என்ற பெயரை 'மறைமலை' என்று தமிழ் பெயராக்கிக் கொண்டார். மக்கள் அவரை மறைமலை அடிகள் என்று அன்போடு அழைத்தனர்.



## நாராயணசாமி பிள்ளை

நாகப்பட்டினத்தில் வெ. நாராயணசாமி பிள்ளையிடம் புராணங்களையும், இதிகாசங்களையும் திருக்குறளையும், எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, தொல்காப்பியம், நன்னூல், சீவகசிந்தாமணி ஆகிய நூல்களைக் கற்று நல்ல புலமை பெற்றார்.


## புனைப்பெயர்

அடிகள் பள்ளியில் படித்து வந்த காலத்தில் நீலலோசனி, பாஸ்கர ஞானோதயம். திராவிட மஞ்சரி
ஆகிய வாரப்பத்திரிகைகளில் 'முருகவேல்' என்னும் புனைப்பெயரில் பல கட்டுரைகளும், பாடல்களும் எழுதி வந்தார். தான் கற்றுத் தேர்ந்த தமிழ் அறிவை பிறரும் கற்று இன்புற வேண்டும் என்பதே அடிகளின் நோக்கமாகும்.

# மறைமலை அடிகள்

கட்டுரை

### சுந்தரம்பிள்ளையும், அடிகளும்



அடிகளின் ஆசிரியராகிய நாராயணசாமி பிள்ளையின் நண்பர் மனோன்மணியம் சுந்தரம்பிள்ளையாவார். ஒரு சமயம் அடிகள் மனோன்மணியம் நாடகத்தைப் பார்த்தார். "எப்படியாவது சுந்தரம்பிள்ளை அவர்களைச் சந்தித்துவிட வேண்டும்" என்று ஆர்வம் கொண்டு தன் ஆசிரியரிடம் தெரிவித்தார்.

உடனே நாராயணசாமி பிள்ளை அடிகளை அழைத்துக் கொண்டு மனோன்மணியம் சுந்தரம்பிள்ளையிடம் சென்றார். சுந்தரம்பிள்ளையும், மறைமலை அடிகளும் நீண்ட நேரம் உரையாடிக் கொண்டிருந்தனர்.

### தமிழ் பேராசிரியர்

மறைமலை அடிகள் 1898-ஆம் ஆண்டு சென்னை கிறித்தவக் கல்லூரியில் தமிழ் பேராசிரியராகப் பணிபுரிந்தார். அவருடன் பரிதிமாற்கலைஞரும் பணி புரிந்தார். அக்கல்லூரியில் 1898 முதல் 1911 வரை 13 ஆண்டுகள் தமிழ் பேராசிரியராகப் பணிபுரிந்தார். மாணவர்கள் திருக்குறளை மனப்பாடம் செய்ய அதிக முயற்சி எடுத்துக் கொண்டார். முல்லைப்பாட்டிற்கும், பட்டினப்பாலைக்கும் மாணவர்கள் நச்சினார்க்கினியர் உரையைப் புரியாமல் படித்து பெரும் அவதிக்குள்ளானார்கள். எனவே மாணவர்கள் எளிய முறையில் படித்து அறிந்து கொள்ள எளிய விளக்க உரையை எழுதினார்.

### சிறந்த மாணவர்கள்

அடிகளின் மாணவர்களுள் வ.சு. செங்கல்வராய பிள்ளை, தணிகைமணி, இரசிகமணி டி.கே.சி. சோமசுந்தர பாரதி, -எஸ். வையாபுரிப் பிள்ளை, திருப்புகழ் மணி, டி.எம். கிருஷ்ணசாமி ஐயர், சிதம்பரநாத முதலியார், சி.என். முத்துரங்க முதலியார் போன்றோர் தலைசிறந்த மாணவர்களாக விளங்கினர்.

# மறைமலை அடிகள்

கட்டுரை

**மண வாழ்க்கை**

மறைமலை அடிகள் தனது 18-வது வயதில் தன்னோடு பழகிய சௌந்தரவல்லியை 1893-ஆம் அண்டு திருமணம் செய்து கொண்டார்.

**தனித்தமிழிலேயே**

அடிகளார் தனது கல்லூரி ஆசிரியப் பணியை விட்ட பின் முழு நேர தமிழ் வளர்ச்சிப் பணியில் மும்முரமாக ஈடுபட்டார்.

ஒருநாள் அடிகளாரும். அவரது மகள் திருமதி நீலாம்பிகையும் அவர்களது இல்லத்தில் உள்ள தோட்டத்தில் நடைப்பயிற்சி செய்து கொண்டிருந்தனர். அப்போது அடிகள் இராமலிங்க அடிகள் இயற்றிய திருவருட்பாவில் உள்ள

"பெற்ற தாய்தனை மகமறந்தாலும்
பிள்ளையைப்பெறுந் தாய்மறந்தாலும்
உற்ற தேகத்தை உயிர்மறந்தாலும்
உயிரைமேவிய உடல்மறந்தாலும்
நமச்சிவாயத்தை நான்மறவேன்."

பாடலை மனம் உருகப் பாடினார். பின் அவர் தன் மகளைப் பார்த்து, "நீலா! இப்பாடலில் உள்ள 'தேகம்' என்னும் வடமொழிச் சொல்லுக்குப் பதில் 'யாக்கை' என்னும் தமிழ்ச் சொல்லைப் போட்டிருந்தால் மிக இனிமையாக அமைந்திருக்கும் அல்லவா?" என்று கேட்டார். நீலாம்பிகை, "ஆம் அப்பா, இனி நாம் தனித்தமிழிலேயே பேசவும், எழுதவும் வேண்டும்" என உறுதிமொழி எடுத்துக் கொண்டார்.

**காதல் வாழ்க**

அரங்கனார் என்னும் தமிழ் அன்பர் ஒருவர் மறைமலை அடிகளுக்கு அடிக்கடி உதவிகள் செய்து வந்தார். அப்போது அரங்கனாரும், தன்மகள் நீலாம்பிகையும் சந்தித்துக் கொண்டனர். காதல் ஏற்பட்டது. திருமணம் செய்து கொள்ள விரும்பினர். அடிகளாரும் காதலுக்கு தடை எதுவும் செய்யவில்லை. காதல் திருமணத்தை நடத்தி வைத்து வாழ்த்தினார்.

# மறைமலை அடிகள்

கட்டுரை

## தமிழ் நூல்கள்

தமிழில் 50-க்கு மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார். மக்களின் நூற்றாண்டு உயிர் வாழ்க்கை; முல்லைப்பாட்டு ஆராய்ச்சி: பட்டினப்பாலை ஆராய்ச்சி; மாணிக்கவாசகர் வரலாறும், காலமும்: அறிவுக்கொத்து; வேளாளர் நாகரீகம்; இந்தி பொது மொழியா? சிந்தனைக் கட்டுரைகள்; முற்காலப் பிற்காலத் தமிழ்ப் புலவோர்; சிறுவர்க்கான செந்தமிழ்; தமிழ்நாட்டவரும். மேல் நாட்டவரும்; கோகிலாம்பாள் கடிதங்கள் ஆகிய நூல்களை மறைமலை அடிகள் தமிழ்த் தாய்க்குத் தந்துள்ளார்.

## துறவு வாழ்க்கை

மறைமலை அடிகள் தமது சமயப் பணியைச் சிறப்பாகச் செய்வதற்கு துறவறமே சிறந்தது என முடிவு செய்து துறவறம் பூண்டார். வெள்ளை ஆடைகளைக் களைந்து காவி உடை அணிந்தார். அடிகளார் பூண்ட துறவறம் மனைவி, மக்களை வெறுப்பதன்று.

## இந்தி எதிர்ப்பு

"வடமொழி என்ற வாழைப் பழத்தோல் சறுக்கி கீழே விழுந்திருக்கும் தமிழை, ஆங்கிலம் என்ற தடி கொண்டு அடித்தாயிற்று. அதன் மேல் இந்தி என்ற லாரியும் மோதினால் தமிழ் பிழைப்பது எப்படி?" என்று மேடைகளில் அடிகளார் முழங்கினார். இந்தி பொது மொழியா? என்ற நூலை எழுதி தமிழ் மக்களிடையே விழிப்புணர்வைத் தட்டி எழுப்பினார். கைம்பெண் விதவைக் கோலத்தை வெறுத்தார். மறுமணத்தை ஆதரித்தார்.

## திருவள்ளுவர் ஆண்டு

தமிழர்களுக்கென்று தனியாக ஆண்டு இல்லாததைப் போக்க அடிகளார் ஆராய்ந்து வள்ளுவர் ஆண்டை உருவாக்கினார். அதன் பின் கலைஞர் கருணாநிதி அவர்களின் ஆட்சிக்காலத்தில் தமிழகத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டு, இன்று தமிழர்கள் ஆண்டாகக் கடைப்பிடித்து வருகிறோம்.

# மறைமலை அடிகள்

கட்டுரை

## குணநலன்கள்

அடிகளார் இனிய முகத்தோடு அன்பாகப் பேசுவார். ஊக்கமும், விடாமுயற்சியும் உடையவர். பொன்நிற மேனியும், கம்பீரமான உடல் தோற்றமும் கொண்டவர். உணவுக் கட்டுப்பாடு உடையவர். எந்த நூலையும் முழுமையாகக் கற்று அதன் கருத்தை அறிபவர். தமிழ் மீதும், சைவத்தின் மீதும் மாறா பற்றுடையவர். எவர் மீதும் தீங்கு நினைக்க மாட்டார். எவரையும் பகைத்துக் கொள்ள மாட்டார். தனித்தமிழ் வளர்ச்சிக்குப் பாடுபட்டார்.

## அடிகளார் மறைவு

வாழ்க்கை முழுவதும் கணவருக்குக் தொண்டு செய்து வாழ்ந்த சௌந்தரவல்லி நோய்வாய்ப்பட்டு அடிகளாரை விட்டுப்பிரிந்தார். "என் துணைவி என்னை விட்டுப் பிரிந்து விட்டாள். நான் அதிக நாள் இருக்க மாட்டேன்" என வேதனையுடன் வாழ்ந்தார். மனைவி இறந்த நான்கு மாதங்களுக்குள் அதாவது 1950-ஆம் ஆண்டு, செப்டம்பர் மாதம் 15-ஆம் நாள் இறைவனடி சேர்ந்தார்.

## நினைவுச்சின்னங்கள்

மறைமலை அடிகள் வாழ்ந்த வீட்டை இந்திய, தமிழ்நாடு அரசுகளின் பொருள் உதவியோடு நினைவுச் சின்னமாக்கப்பட்டது. நாகையில் அடிகளாரின் திருஉருவச்சிலை நிறுவப்பட்டுள்ளது. மேலும் மறைமலை நகர், மறைமலை அடிகள் பாலம், மறைமலை அடிகள் பள்ளி என நினைவுச்சின்னங்கள் நமக்கு அவர் புகழை பறைசாற்றுகின்றன.




நன்றி
தமிழ் வளர்த்த தமிழர்கள் -தா.ஸ்ரீனிவாசன்


அகர முதல நாளை நமதே
அகர முதல
உரக்க சொல்வோம்
சொன்ன ஒரு சொல்
விடுபட்ட அம்பு
கடந்து போன வாழ்க்கை
நழுவ விட்டுவிட்ட சந்தர்ப்பம் – ஆகிய நான்கும்
மீண்டும் திரும்ப வராது.
Aagaramuthalaa
www.அகரமுதல.com

அகமும் தமிழே! முதலும் தமிழே!!

"தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு
தமிழே ஞாலத்தில் தாய்மொழி பண்டு
கனிச்சாறு போற்பல நூலெலாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு"

என்றும் தலைப்பணியாம் தமிழ்ப்பணியில்,

அகர முதல செய்திக்குழு | அகர முதல இலக்கிய பேரவை
அகர முதல கல்விக்குழு | சிவம் அறக்கட்டளை.

தொடர்பிற்கு:

9597887847/8870884969

www.அகரமுதல.com

Aagaramuthalaa

aagaramuthala@gmail.com